ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2345/35 - 2023 අගෝස්තු මස 15 වැනි අඟහරුවාදා - 2023.08.15

*2345/35 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/1978* (x) (ஈ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*25 அ மற்றம் 70இ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) ஆ என்னும் பிரிவின்கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின்16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 27 (1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும் பட்டமளிக்கும் நிறுவகமொறாக ஏற்றங்கீகரிக்கப்பட்டு PV 66705 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான காட்சு "(KAATSU) - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிக்கல் டெக்னோலொஜி ட்றெயினிங் சென்ரர் (பிறைவேட்) லிமிட்டெட் (KIU) தொடர்பில் மற்றும் கம்பெனிகள் பதிவாளர் தலைமையதியினால் வழங்கப்பட்ட 2023, மே 26 ஆந் திகதிய சான்றிதழின் கீழ் சொல்லப்பட்ட KAATSU - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்நலொஜி டிரெய்னிங் சென்றர் (பிரைவட்) லிமிட்டெட் (KIU), KIU கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆக கூட்டிணைக்கப்பட்டுள்ளதாதலால் சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2015 ஆம் ஆண்டு சனவரி 7 ஆந் திகதிய 1896/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை, சொல்லப்பட்ட கட்டளையில் "KAATSU- ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்நலொஜி டிரெய்னிங் சென்றர் (பிரைவட்) லிமிட்டெட் (KIU)" என்னும் சொற்கள் தோன்றுகின்ற இடமெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக "KIU கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன். அத்துடன் மேற்கூறப்பட்ட பிரிவுகளின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, அறிவித்தல், ஒப்பந்தம், தொடர்பாடல், அல்லது வேறு ஆவணத்தில் "KAATSU- ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்நலொஜி டிரெய்னிங் சென்றர் (பிரைவட்) லிமிட்டெட் (KIU)" என்பதற்கான ஒவ்வொரு குறிப்பீடும் "KIU கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" என்பதற்கான குறிப்பீடொன்றாக வாசிக்கப்பட்டு பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.*

1A - PG 6444 — 286 (2023/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும் 2015 ஆம் ஆண்டு சனவரி 7 ஆந் திகதிய 1896/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் சொல்லப்பட்ட KAATSU - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்நலொஜி டிரெய்னிங் சென்றர் (பிரைவட்) லிமிட்டெட் (KIU) இன் மீது அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பின்பற்றி இக்கட்டளை பயனுக்கு வரும் தேதிக்கு முன்னர் அதனால் பிரயோகிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம் அல்லது புரியப்பட்ட ஏதேனும் கடமை அல்லது பணி எல்லா அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்களுக்காகவும் KIU கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் இனால் செல்லுபடியானமுறையில் பிரயோகிக்கப்பட்டதாகவும் புரியப்பட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

**கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, ஓகத்து 10.

EOG 08 - 0161